(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 10.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 செப்தெம்பர் 23 புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2/2020

கௌரவ ஹேஷா விதானகே,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டுக்கு ரின் மீன் இறக்குமதி செய்யும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) ரின் மீன் இறக்குமதி செய்யும் இந்நாட்டு நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டில், நுகர்வுக்குப் பொருத்தமற்ற ரின் மீன் இறக்குமதி செய்த சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் அளவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உரிய இறக்குமதி நடவடிக்கைகளுக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இறக்குமதி செய்யப்பட்ட பாவனைக்கு பொருத்தமற்ற ரின் மீன் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் நுகர்வுக்குப் பொருத்தமற்ற ரின் மீன் இறக்குமதி செய்யப்பட்டிருப்பின், அவ்விறக்குமதிகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

50/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள அரசாங்க பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்சமயம் கடமையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் ஒவ்வொரு பாடத்திற்கும் ஏற்ப தற்சமயம் நிலவும் வெற்றிடங்கள் யாதென்பதையும்;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

93/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சமூக பொலிஸ் அலகுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த அலகுகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சமூக பொலிஸ் அலகினூடாக பெற்றுக் கொள்ளக் கூடிய சேவைகள் தொடர்பில் மக்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) சமூக பொலிஸ் அலகுகளின் கடந்த வருட முன்னேற்றம் தொடர்பில் திருப்தியடைய முடியுமா என்பதையும்;

(ii) 2018 மற்றும் 2019 ஆம் வருடங்களில் சமூக பொலிஸ் அலகுகளினால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளின் நிதி ரீதியான பெறுமதி அளவீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) சமூக பொலிஸ் அலகுகளின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் வகையில் புதிய சட்டமொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், புதிய சட்டமொன்றினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

112/2020

கௌரவ சாந்த பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இன்றளவில் சமுர்த்தி நிவாரணம் பெறும் வலுவூட்டப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அதிகளவான குடும்பங்கள், சமுர்த்தி நிவராணத்தை பெறும் நோக்கத்துடன் விண்ணப்பித்துள்ளன என்பதனை அவர் அறிவாரா?

(இ) (i) அக்காத்திருப்பு பட்டியலில் உள்ள குடும்பங்களுக்கு சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

115/2020

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையிலும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகளை மேலும் பலப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

119/2020

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி தயாரிப்பு வலயத்தின் நுழைவுப் பாதை நிர்மாணிக்கப்படும் போது சேதமடைகின்ற சொத்துக்களுக்கும் அதற்காக சுவீகரிக்கப்படும் காணிகளுக்கும் இழப்பீடுகள் செலுத்தப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி இழப்பீடு பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) அதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இழப்பீடுகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் உடுபத்தாவ பிரதேச செயலாளருக்கு இன்றளவில் நிதி விடுவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) அத் தொகை விடுவிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

125/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) ஆயினும், இதுவரை அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப் பணிகள் ஐம்பது வீதத்திற்கும் மேற்பட்ட அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் தற்போது 2 வருடங்களாக அதன் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன என்பதையும்;

(ii) மன்னார் நகர எல்லைக்குள் வருகின்ற எமில் நகர் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற பொது விளையாட்டு மைதானத்தின் முதலாம் பகுதியின் மறுசீரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும், அதன் இரண்டாம் பகுதி இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி விளையாட்டு மைதானத்தின் இரண்டாம் பகுதியின் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

8.

157/2020

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சில பிரதேசங்கள் சில மணி நேர மழைவீழ்ச்சியின்போது கூட மழை நீரில் மூழ்கின்றன என்பதையும் ;

(ii) அதன் காரணமாக வீதிகளில் நீர் நிரம்பி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகின்றது என்பதையும்;

(iii) மழை நீர் வழிந்தோடுவதற்கான சரியான முறைமை காணப்படாதமையே இதற்கான பிரதான காரணம் என்பதையும்;

(iv) இதற்குத் தீர்வாக 25 பிரதான மதகுகளை அபிவிருத்தி செய்வதற்கு கடந்த அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ஐந்தின் பணிகள் கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்திலேயே பூர்த்திசெய்யப்பட்டன என்பதையும் ;

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட 25 மதகுகளில் இதுவரையில் அபிவிருத்தி செய்யப்படாத மதகுகளை அபிவிருத்தி செய்வதற்காக இந்த அரசாங்கத்திடம் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும் ;

(ii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

205/2020

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த திரு. ரம்ஸி ராசிக் தமக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக 2020.04.09 ஆம் திகதி காலை மின்னஞ்சல் மூலம் பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதியிடம் முறைப்பாட்டை மேற்கொண்ட அதேநாளில் பிற்பகல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்வதற்கான கட்டளையின்றி கைதுசெய்யப்பட்டிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i ) திரு. ரம்ஸி ராசிக் 2020 ஏப்ரல் 09 ஆம் திகதி முதல் இன்றுவரை கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது ஏன் என்பதையும்;

(ii) அவர் எவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பதையும்;

(iii) அவருக்கெதிராக முறைப்பாடுகள் ஏதாவது காணப்பட்டனவா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், யார் அத்தகைய முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தார் என்பதையும்;

(v) அவர் ஏதாவது குற்றம் புரிந்திருக்கிறாரா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், அத்தகைய குற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) இலங்கையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து அதே வகையான குற்றத்துக்காக வேறு யாராவாவது ஆட்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனரா என்பதையும்;

(ii) சட்டத்தை அனைவருக்கும் சமமான முறையில் நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் திருப்தியடைகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

10.

209/2020

கௌரவ மொஹொமட் முசம்மில்,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்காகச் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கடதாசிகள் எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்;

(iv) மேற்படி கடதாசிகளை இறக்குமதி செய்த கம்பெனிகள் யாவையென்பதையும்;

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் இலங்கைக்கு கடதாசி இறக்குமதி செய்வதற்காகச் செலவாகிய மொத்தத் தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

248/2020

கௌரவ வேலு குமார்,— பிரதம அமைச்சரும் நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) கண்டி மாவட்டத்தில், தொலுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான லெவலன்ட் தோட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் "உதா கம்மான வீட்டுத் திட்டம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள —

(i) உதா கம்மான வீட்டுத்திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) வீடொன்றை நிர்மாணிப்பதற்கு ஒவ்வொரு வீட்டுப்பயனாளிக்கும் —

(i) வழங்கப்படுவதாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட முழுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) வழங்கப்படும் முழுத் தொகையில் கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) வழங்கப்படும் முழுத் தொகையில் உதவித் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) ஒவ்வொரு வீட்டுப் பயனாளிக்கும் உரித்தான நிலுவைத் தொகையினை வழங்கி, இத் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

12.

342/2020

கௌரவ சந்திம வீரக்கொடி,— பிரதம அமைச்சரும், நிதி அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் நகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) 2018/05/11 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு அமைய கணக்காய்வு பரிசோதகர் சேவையின் II ஆம் தரத்திற்கு கணக்காய்வுப் பரிசோதகர் ஆட்சேர்ப்பு – 2018 இற்கான திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி போட்டிப் பரீட்சை 2018 அக்டோபர் மாதம் 14, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் சில பரீட்சை நிலையங்களில் நடைபெற்றன என்பதையும்;

(iii) மேற்படி போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை என்பதையும்;

(iv) மேற்படி போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு இதுவரை 2 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளை துரிதமாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) அவ்வாறு பெறுபேறுகளை வெளியிட்ட பின்னர் தகைமை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு உரிய நியமனங்கள் துரிதமாக வழங்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

6/2020

கௌரவ ஹேஷா விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறி பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற அனுகூலங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் தொண்டர் அடிப்படையிலா சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(iv) ஆமெனில், அறநெறி பாடசாலை ஆசிரியர்களின் நலனோம்புகைக்காக திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

54/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கும், ஊவா மாகாண சபைக்கும் மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதை தனித்தனியாகவும்;

(ii) மேற்படி வீதிகளில் தற்போது பழுதடைந்துள்ள வீதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது பழுதடைந்துள்ள வீதிகளின் நீளம் எத்தனை கிலோமீற்றர்கள் என்பதையும்;

(iv) அவ்வாறு பழுதடைந்துள்ள வீதிகளை துரிதமாக புனரமைப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

97/2020

கௌரவ புத்திக பத்திறண,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்திய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்புடன் இலங்கையை இணைக்கும் திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்துள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அது நடைமுறைக்கு வரும் திகதி யாதென்பதையும்;

(iii) இலங்கை அரசாங்கம் அதற்காக செலவிட எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தினால் இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தினால் ஏற்படக்கூடிய ஒவ்வாத கலாசார மற்றும் சமூக ரீதியான மாற்றங்கள் தொடர்பில் புலமைசார் ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அந்த ஆய்வின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 செப்தெம்பர் 11 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 19 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 19

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 22302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடி பொருட்கள்) - இலங்கை கடற்படை" என்பதற்கு நேரெதிராக குறிப்பீடு செய்யப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 640,000,000 இருந்து ரூபா. 595,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 20 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 20

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 30602 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு — இலங்கை புகையிரதத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 2,400,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 1,800,000,000 இருந்து ரூபா. 1,500,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 21 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 21

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31002 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | ரூபா. 40,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 120,000,000 இருந்து ரூபா. 70,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழே குறித்துரைக்கப்பட்ட 22 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 22

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளையினை ஆக்குகின்ற அதேவேளை, அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "வேலை நிறைவுற்ற முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய செலவினங்களின் வரைறை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் குறைந்த பெறுகைகளின் வரையறை | ரூபா. 440,000,000 இருந்து ரூபா. 360,000,000 வரை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய படுகடன் மீதி வரையறை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய பொறுப்புக்களின் வரையறை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ*
நிதி அமைச்சர்

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரமும் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடனும், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதியாண்டு 2019 தொடர்பில், 2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

### குழுக் கட்டளை இலக்கம். 01

2019 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00201, 02001, 02401, 05101, 05201, 05301, 05401, 05501, 05601, 13001, 15801, 20101, 22301, 22401, 22501, 23101, 28301, மற்றும் 33101 ஆகியவை தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்.

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் (ரூபா) | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக் குறைந்த எல்லைகள் (ரூபா) | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1. | பிரதம அமைச்சர் அலுவலகம் | 00201 | 23,000,000 | 21,000,000 | 11,000,000 | 9,500,000 | 77,000,000 | 76,500,000 | 1 |
| 2. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | 18,000,000 | 20,000,000 | 95,000,000 | 115,000,000 | 2 |
| 3. | தேசிய கொள்வனவு ஆணைக்குழு | 02401 | 1,200,000 | 2,100,000 | | | 3,000,000 | 4,000,000 | 3 |
| 4. | டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05101 | | | 2,500,000 | 1,300,000 | | | 4 |
| 5. | விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05201 | | | 22,300,000 | 20,000,000 | | | 5 |
| 6. | பொதுவழங்கல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05301 | | | 2,500,000 | 170,000 | | | 6 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. | தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05401 | | | 4,400,000 | 3,200,000 | | | 7 |
| 8. | வெகுசன ஊடக அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05501 | 1,000,000 | 3,500,000 | 200,000 | 2,500,000 | 6,000,000 | 25,000,000 | 8 |
| 9. | விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் | 05601 | | | 300,000 | 120,000 | | | 9 |
| 10. | பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் | 13001 | 40,000,000 | 65,000,000 | 23,200,000 | 42,000,000 | 85,000,000 | 206,000,000 | 10 |
| 11. | அரச தொழில் முயற்சிகள், கண்டிய மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் | 15801 | 4,200,000 | 5,700,000 | 2,000,000 | 2,500,000 | | | 11 |
| 12. | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 20,500,000 | | | 12 |
| 13. | இலங்கை கடற்படை | 22301 | | | 510,000,000 | 440,000,000 | | | 13 |
| 14. | இலங்கை விமானப்படை | 22401 | | | 418,000,000 | 380,000,000 | | | 14 |
| 15. | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,080,000,000 | 1,060,000,000 | | | 15 |
| 16. | கடன் இணக்க சபைத் திணைக்களம் | 23101 | | | 500,000 | 449,000 | | | 16 |
| 17. | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | 28301 | | | 71,000,000 | 66,000,000 | | | 17 |
| 18. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | | | 275,000,000 | 255,000,000 | | | 18 |

(இக்கட்டளைகள் 2019.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

2020.09.09 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ மஹிந்த ராஜபக்ஷ
நிதி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.